**நவம்பர் – 11**

# TNPSC துளிகள்

- இந்தியத் தேர்தல் ஆணையம் ஆனது, இந்திய ஆட்சிப் பணி அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கைத் தற்போதைய சத்யபிரதா சாஹூவுக்குப் பதிலாக தமிழ்நாட்டின் தலைமை தேர்தல் அதிகாரியாக நியமித்துள்ளது.
  - இந்தப் தலைமை தேர்தல் அதிகாரிப் பதவிக்கு நியமிக்கப் பட்ட முதல் பெண் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி இவரே ஆவார்.
- 2024 ஆம் ஆண்டு சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் போட்டியில், அலெக்ஸி சரானா என்பவரை வீழ்த்தி அர்ஜுன் எரிகைசி உலகளாவியச் சதுரங்கப் போட்டியின் தர வரிசையில் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.
- ஒடிசாவைச் சேர்ந்த அனில் பிரதானுக்கு, கிராமப்புற இந்தியாவில் உள்ள மாணாக்கர்களிடையே STEM கல்வியை ஊக்குவிப்பதில் அவர் ஆற்றியப் பணிக்காக, கிராமப்புற மேம்பாட்டிற்கான சிறந்த பங்களிப்பிற்காக மூன்றாவது ரோகினி நய்யார் பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- ‘சாகர்மாலா பரிக்ரமா’ திட்டத்தின் கீழ் இயக்கப்பட்ட ஒரு தானியங்கு கடல் மேற்பரப்பு இயக்கக் கப்பல் என்பது மனிதர்களின் கட்டுப்பாடு இல்லாமல் மும்பையில் இருந்து தூத்துக்குடி வரையிலான 1,500 கிலோ மீட்டர் பயணத்தினை நிறைவு செய்துள்ளது.
  - தானியங்கு கடல்சார் தொழில்நுட்பத்தின் மீதான இந்தியாவின் அதிகரித்து வரும் அனுபவத்தை அடையாளம் காட்டும் இம்மாதிரியான முதல் வகையான பயணம் இதுவே ஆகும்.
- AUSTRAHIND எனப்படும் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா இடையேயான 3வது கூட்டு இராணுவப் பயிற்சி புனேவில் தொடங்கியது.
- இந்திய தரைப் படை, கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவை இணைந்து பூர்வி பிரஹார் என்ற ஒரு முப்படைக் கூட்டுப் பயிற்சியை கிழக்குப் படைப் பயிற்சி தளத்தில் நடத்தி வருகின்றன.
  - இந்தக் கிழக்குப் படைப் பயிற்சி தளத்தில், சிக்கிம் மற்றும் அருணாச்சலப் பிரதேச மாநிலங்களிலுள்ள உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டின் பகுதிகள் என்பவை ராணுவப் படைகளால் நிர்வககிக்கப் படுகின்றன.
- ஆஸ்திரேலிய நாட்டின் அரசாங்கம் ஆனது 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்கான ஒரு சட்டத்தை அறிமுகப் படுத்த உள்ளது.
- இந்திய நாட்டு அரசானது, இந்தியாவில் கூட்டணியின் செயலகத்தை நிறுவுவதற்காக உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணியுடனான (GBA) செயலேற்பு மீதான நாடுகள் ஒப்பந்தத்தில் (HCA) அதிகாரப்பூர்வமாக கையெழுத்திட்டுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழகத்திற்கான மின்னஞ்சல் கொள்கை

- தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கான மாநில மின்னஞ்சல் கொள்கையானது சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- மதம், சாதி மற்றும் இனத்தை இழிவுபடுத்தும் சொற்களைக் கொண்ட மின்னஞ்சல்கள் மற்றும் தேச விரோதச் செய்திகள் மற்றும் ஆபாசமான விஷயங்களைக் கொண்ட

மின்னஞ்சல்களுக்கு எதிராக இது எச்சரிக்கை விடுக்கிறது.

- தமிழக மாநில அரசின் அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் சேவைகளை சுமார் 1.10 லட்சம் பேர் பயன்படுத்தி வருகின்றனர்.
- தமிழ்நாடு மாநில அரசானது செயலகத்திற்குள் உள்ள செயலாளர்கள் மற்றும் பிற பயனர்களுக்கான உள் மற்றும் வெளிப்புறத் தகவல்தொடர்புகளுக்காக மின்னஞ்சல் சேவைகளை 2008 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது.




## விஷமுள்ள பாம்புக்கடி




- விஷமுள்ள பாம்புக்கடியினை 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலப் பொது சுகாதாரச் சட்டத்தின் கீழ் ஓர் அறிவிக்கக் கூடிய நோயாக தமிழ்நாடு அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- விஷமுள்ள பாம்புக்கடி என்பது விஷப்பாம்பு கடித்தால் ஏற்படும் உயிருக்கு ஆபத்தான மருத்துவப் பாதிப்பு நிலையாகும்.
- கிராமப்புறம் மற்றும் பாம்புகள் அதிகம் உள்ள பகுதிகளில் இது ஒரு மிகவும் முக்கிய சுகாதாரப் பிரச்சினையாக உள்ளது.

- இந்த ஒரு நடவடிக்கையானது சிறந்த தடுப்பு உத்திகளுக்கு வழி வகுக்கும், உயிரிழப்பு விகிதங்களைக் குறைக்கும் மற்றும் மாநிலம் முழுவதும் இதற்கான முக்கிய சிகிச்சை வசதிகளை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- உலக சுகாதார அமைப்பானது பாம்புக்கடியை உலகளாவிய பெரும் பொது சுகாதாரப் பிரச்சினையாக அங்கீகரித்து, உலகளவில் பாம்புக்கடியால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் குறைபாடுகளைக் குறைப்பதற்கான ஓர் உத்தியை அறிமுகப்படுத்தியுள்ளது.

## கடல் பசு வளங்காப்பு மையம்

- தஞ்சாவூரின் மனோராவில் சர்வதேச கடல் பசு/ஆவுளியா வளங்காப்பு மையத்தினை (IDCC) நிறுவுவதற்கான ஒப்பந்தப் புள்ளிகளை வரவேற்பதாக வனத்துறை அறிவித்து உள்ளது.
- IDCC ஆனது TN-SHORE (தமிழ்நாடு - பெருங்கடல் வளங்கள் மற்றும் பெருங்கடல் சார் பொருளாதாரத்தினை நிலையான முறையில் பயன்படுத்துதல்) முன்னெடுப்பின் கீழ் நிறுவப்பட உள்ளது.
- இது "கடல் பசு" என்றும் அழைக்கப்படுகின்ற கடல் வாழ் பாலூட்டியான "அருகி வரும்" டுகோங் இனத்தையும் பால்க் விரிகுடாவில் அதன் வாழ்விடத்தையும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## விஜயகரிசல்குளம் அகழாய்வு

- விஜயகரிசல்குளத்தில் மூன்றாம் கட்ட அகழ்வாராய்ச்சியின் போது நகைகள் மற்றும் வேட்டையாடும் கருவிகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் சுமார் 6000 ஆண்டுகள் பழமையான கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இது தமிழ்நாட்டின் விருதுநகர் மாவட்டத்தில் வெம்பக்கோட்டைக்கு அருகில் அமைந்து உள்ளது.
- சமீபத்தில் கண்டெடுக்கப்பட்ட சில பொருட்களில் பொதுவாகப் பழங்கால நகைகள் தயாரிப்பதில் பயன்படுத்தப் படுகின்ற ஜாஸ்பர் (சூரியகாந்தக்கல்) மற்றும் சார்ட் வகை கற்கள் ஆகியவையும் அடங்கும்.

- தங்கம் மற்றும் செப்பு நாணயங்கள், உடைந்த சுடுமண்பாண்டச் சிலைகள், சதுரங்க விளையாட்டுக் காய்கள், கண்ணாடி மணிகள் மற்றும் வட்ட சில்லைகள் உட்பட சுமார் 2,800க்கும் மேற்பட்ட கலைப் பொருட்கள் இது வரை கண்டெடுக்கப் பட்டுள்ளன.




# தேசியச் செய்திகள்

## உச்ச நீதிமன்றத்தின் மூன்று புத்தகங்கள்



- இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், உச்ச நீதிமன்றத்தின் 75 ஆண்டுகள், இந்தியாவில் உள்ள சிறைகள் மற்றும் சட்ட உதவி பற்றிய மூன்று புத்தகங்களை வெளியிட்டார்.
- இந்தப் புத்தகங்கள் பின்வருமாறு தலைப்பிடப்பட்டுள்ளன:
    - தேசத்திற்கான நீதி: இந்திய உச்ச நீதிமன்றத்தின் 75 ஆண்டு கால நினைவுகள்
    - இந்தியாவில் உள்ள சிறைச்சாலைகள்: சிறைக் கையேடுகள் மற்றும் சீர்திருத்தம் மற்றும் நெரிசலைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் சார்பீடு
    - சட்டப் பள்ளிகள் மூலமான சட்ட உதவி: இந்தியாவில் சட்ட உதவி மையங்களின்

செயல்பாடு குறித்த அறிக்கை.

## நிலநடுக்கோட்டு மின்னோட்டம் - இந்திய மாதிரி

- பூமியின் புவி காந்த நிலநடுக் கோட்டு ரேகையானது இந்தியாவின் தென் முனைக்கு மிக அருகில் செல்கிறது.
- நிலநடுக்கோட்டு மின்னோட்டம் (EEJ) எனப்படும் 100 kA வரிசையின் தனித்துவமான மற்றும் மிகவும் வலுவான மின்னோட்டம் ஒன்று உள்ளது.
- இது மேல் மட்ட வளிமண்டலத்தில் சுமார் 105-110 கிமீ உயரத்தில் பாய்கிறது.
- இந்தத் தீவிர மின்னோட்டப் பாய்வு காரணமாக, நிலநடுக்கோட்டுப் பகுதிக்கு அருகில் உள்ள புவி காந்தப்புலம் ஆனது சில பத்துகள் முதல் சில நூறு நானோ டெஸ்லாக்கள் (nT) அளவிற்கு மேம்படுத்தப்படுகிறது.
- புவி காந்தப்புல மேம்பாட்டின் மூலம் இந்த மின்னோட்டத்தின் தீவிரத்தை அளவிடுவது அயனி மண்டல மின்புலத்தின் மாறுபாட்டைப் பற்றிய மிகவும் முக்கியமான புரிதலை வழங்குகிறது.
- நவி மும்பையில் உள்ள இந்தியப் புவி காந்தப் புல கல்வி நிறுவனத்தின் (IIG) அறிவியல் ஆய்வாளர்கள் EEJ மின்னோட்டத்தை மிகத் துல்லியமாகக் கணிக்கக்கூடிய செயலறிவு மாதிரியை உருவாக்கியுள்ளனர்.
- சுற்றுப்பாதையில் உள்ள செயற்கைக்கோள், உலகளாவிய வழிகாட்டுதல் செயற்கைக் கோள் அமைப்பின் (GNSS) அடிப்படையிலான வழிகாட்டுதல் / நிலைப்படுத்தல் மற்றும் பல்வேறு இன்ன பிற செயற்கைக் கோள் தொடர்பு இணைப்புகள் மற்றும் மின்னாற்றல் கட்டமைப்புகளில் EEJ பாய்வின் தாக்கத்தை நன்கு புரிந்து கொள்ள இது உதவும்.




# சர்வதேசச் செய்திகள்

## உலகின் பழமையான கடல் சார் எண்ணெய்க் கிணறு தளம்

- அஜர்பைஜான் நாட்டுத் தலைநகர் பக்குவின் கடற்கரையிலிருந்து 100 கிலோமீட்டர் தொலைவில் காஸ்பியன் கடலில் நெஃப்ட் டஸ்லாரி என்ற எண்ணெய்க் கிணறு தளம்

அமைந்துள்ளது.

- இந்த உலகின் மிகப் பழமையான கடல்சார் தளம் ஆனது "ஆயில் ராக்ஸ்-எண்ணெய்த் துரப்பண மேடை" என்றும் அழைக்கப்படுகிறது.
- சோவியத் காலத்தில் 1940 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் இது கட்டப்பட்டது.
- நெஃப்ட் டஸ்லாரி ஒரு தனி துளையிடும் தளமாக தொடங்கப்பட்டது என்ற நிலையில் இது பின்னர் பல்வேறு எண்ணெய் கிணறுகளின் விரிவான வலையமைப்பாகவும் 100 மைல்களுக்கு மேல் தொலைவிலான பாலங்களாகவும் விரிவடைந்தது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## அரிய வகை பூனை பாம்பு – பீகார்




- பூனைப் பாம்பு அல்லது பொய்கா ட்ரைகோனாட்டா ஆனது, மற்ற பாம்பு இனங்களைக் காட்டிலும் மிகவும் குறைவான நச்சுத் தன்மை உடையது மற்றும் மிகவும் அரிதான ஒன்றாகக் கருதப்படுகிறது.
- பீகாரில், அந்த மாநிலத்தின் ஒரே புலிகள் வளங்காப்பகமான வால்மீகி புலிகள் வளங் காப்பகத்தில் இந்த காண்பதற்கு அரிதான பாம்பு கண்டறியப்பட்டுள்ளது.

- இதன் கண்கள் பூனையின் கண்களை ஒத்திருக்கும்.
- இந்தப் பாம்புகளானது இரவு நேரங்களில் மிக அதிகம் செயல்படக் கூடியவை மற்றும் அதன் விஷம் ஆனது பல்லிகள், தவளைகள், எலிகள் மற்றும் பறவைகள் போன்ற சில உயிரினங்களுக்கு மட்டுமே ஆபத்தானது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகக் கல்வி புள்ளி விவரங்கள் 2024





- யுனெஸ்கோ அமைப்பின் புள்ளி விவரங்கள் நிறுவனமானது (UIS) 2024 ஆம் ஆண்டு உலகக் கல்வி புள்ளிவிவரங்கள் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2010 ஆம் ஆண்டில் 13.2% ஆக இருந்த கல்விக்கானப் பொதுச் செலவினங்களின் உலகச் சராசரியானது 2020 ஆம் ஆண்டில் 12.5% ஆகக் குறைந்துள்ளது.
- நேபாளம் மற்றும் பூடான் போன்ற தெற்காசிய நாடுகள் தங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 4-6% பங்கினைக் கல்விக்காக ஒதுக்கியுள்ளன.
- இந்தியா 2015 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் கல்விக்காக என்று அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 4.1-4.6% பங்கையேச் செலவிட்டுள்ளது.
- 2015 முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான ஒரு காலக் கட்டத்தில் கல்விக்கான இந்திய அரசின் செலவினம் 13.5% முதல் 17.2% வரை என்ற ஏற்ற இறக்கத்திலேயே உள்ளது.
- மத்திய மற்றும் தெற்கு ஆசியாவில் 2022 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் பங்கின் சதவீதத்தில், இந்தியாவின் கல்விச் செலவினம் ஆனது பூடான் (7.5%), கஜகஸ்தான் (7.2%), மாலத்தீவுகள் (4.7%), தஜிகிஸ்தான் (5.7%) மற்றும் உஸ்பெகிஸ்தான் (5.2%) ஆகியவற்றின் செலவினங்களை விட மட்டுமே குறைவாக உள்ளது.
- முழு ஆசியப் பிராந்தியத்துடன் ஒப்பிடச் செய்கையில், ஜப்பான் மற்றும் சீனா போன்ற நாடுகளை விட இந்தியாவின் செலவினம் அதிகமாகும்.

## QS அமைப்பின் ஆசியத் தரவரிசை 2025

- இந்த 16வது அறிக்கையில் 25 வெவ்வேறு உயர்கல்வி அமைப்புகளைச் சேர்ந்த 984

பல்கலைக் கழகங்கள் இடம் பெற்றுள்ளன.

- இதில் 193 இந்திய நிறுவனங்கள் இடம் பெற்றதுடன் சீனா (135) மற்றும் ஜப்பான் (115) ஆகியவற்றினை விஞ்சி இந்தப் பட்டியலில் அதிகப் பிரதிநிதித்துவம் பெற்ற நாடாக இந்தியா விளங்குகிறது.
- இதில் பீகிங் பல்கலைக் கழகம் ஆனது ஆசிய அளவில் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- இதில் அதைத் தொடர்ந்து ஹாங்காங் பல்கலைக்கழகம் மற்றும் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகம் ஆகியவை உள்ளன.
- இதில் டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (44) ஆனது மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தினை (48) முந்தி இந்தியாவின் முன்னணி நிறுவனமாக மாறியுள்ளது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது இப்பட்டியலில் 56வது இடத்தினைப் பெற்று இந்தியாவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- முதல் 100 இடங்களில் ஆறு பல்கலைக்கழகங்கள் உட்பட இந்திய நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன.





## முக்கிய தினங்கள்

### உலக ஊடுகதிரியல் தினம் - நவம்பர் 08

- இது வில்ஹெல்ம் கான்ராட் ரான்ட்ஜென் என்பவர் X-ஊடுகதிர்வீச்சைக் கண்டுப்பிடித்த நிகழ்வினை நினைவு கூருகிறது.
- 1895 ஆம் ஆண்டு நவம்பர் 08 ஆம் தேதியன்று, ஜெர்மன் இயற்பியலாளர் வில்ஹெல்ம் கான்ராட் ரான்ட்ஜென் X-ஊடுகதிர்வீச்சைக் கண்டுபிடித்தார்.
- 1901 ஆம் ஆண்டில், ரோன்ட்ஜென் தனது கண்டுபிடிப்பிற்காக நோபல் பரிசு பெற்றார்.
- இந்த நாள் ஆனது நவீன சுகாதார அமைப்பில் ஊடுகதிரியல் வல்லுநர்களின் முக்கியப் பங்கை அங்கீகரித்து கௌரவிக்கிறது.

- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Radiographers: Seeing the Unseen' என்பது ஆகும்.




# இதரச் செய்திகள்

## எடெல்கிவ்-ஹூருன் இந்தியா மனித இனப் பற்றாளர் பட்டியல் 2024

| Rank | Name | Donation (INR Cr) | Change % | Primary Cause | Company/Foundation |
|---|---|---|---|---|---|
| 1(-) | Shiv Nadar & family | 2,153 | 5% | Education | Shiv Nadar Foundation |
| 2(+1) | Mukesh Ambani & family | 407 | 8% | Admission for disadvantaged communities | Reliance Foundation |
| 3(+3) | Bajaj family | 352 | 33% | Education for Engineering | Bajaj Group Trust |
| 4(-) | Kumar Mangalam Birla & family | 334 | 17% | Education | Aditya Birla Capital Foundation |
| 5(-) | Gautam Adani & family | 330 | 16% | Education for remote villages | Adani Foundation |
| 6(+2) | Nandan Nilekani | 307 | 62% | Ecosystem Building | Nilekani Philanthropies |
| 7* | Krishna Chivukula | 228 | New | Education | ASHA Foundation |
| 8(-1) | Anil Agarwal & family | 181 | -25% | Education | Anil Agarwal Foundation |
| 9(+3) | Susmita & Subroto Bagchi | 179 | 63% | Public Healthcare | Mindtree |
| 10(-) | Rohini Nilekani | 154 | -10% | Ecosystem Building | Rohini Nilekani Philanthropies |

- HCL டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் சிவ் நாடார் ஐந்து ஆண்டுகளில் மூன்றாவது முறையாக இந்தப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார்.
- அவர் 2024 ஆம் நிதியாண்டில் 2,153 கோடி ரூபாய் நன்கொடையாக அளித்துள்ளார்.
- சுமார் 407 கோடி ரூபாய் நன்கொடையுடன் முகேஷ் அம்பானி இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

- பஜாஜ் குழுமமானது சுமார் 352 கோடி ரூபாய் நன்கொடையுடன் இதில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- இதில் கௌதம் அதானி 330 கோடி நன்கொடையுடன் ஐந்தாவது இடத்தைப் பிடித்தார்.
- 18 நபர்கள் 100 கோடிக்கு மேல் நன்கொடை அளித்துள்ளனர் என்ற நிலையில் இது 2019 ஆம் ஆண்டில் வெறும் 9 பேராக இருந்த எண்ணிக்கையில் இருந்து குறிப்பிடத்தக்க ஒரு அதிகரிப்பாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★